**DEPOSITION OF WITNESS**
**In the court of Sub Court, Eraniel**
**S.C.No. 289/2022**
**Prosecution Witness – PW 3**

| | | |
|---|---|---|
| Name | : | திரு.டாக்டர்.ராஜேஷ் |
| Father's Name | : | |
| Age | : | |
| Calling | : | |
| Village | : | |
| Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 09.09.2025.

(Accused Present).

முதல் விசாரணை–

நான் தற்சமயம் கன்னியாகுமரி அரசு மருத்து மருத்துமனை, ஆசாரி பள்ளத்தில் சட்டம் சார்ந்த மருத்துவ துறையில் பேராசிரியராக பணியில் இருக்கிறேன். கடந்த 12.11.2020 அன்று கருங்கல் காவல் நிலைய குற்ற எண். 153/2020 வழக்கில் கைபற்றப்பட்ட மாதிரி திரவத்தில் 8.9 சதவீதம் ஆல்கஹால் இருந்ததாகவும், அதில் 9.3 சதவீதம் அட்ரோபின் இருந்ததாகவும் வட்டார துறை அறியிவில் ஆய்வகம் திருநெல்வேலியில் இருந்து பெறப்பட்ட ஆய்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாக, கருங்கல் காவல் நிலைய ஆய்வாளர் இந்த அளவிற்கு அட்ரோபின் கலந்த ஆல்கஹாலை ஒரு நபர் உட்கொண்டால், என்ன விளைவுகள் ஏற்படும் என்று கேட்டுக்கொண்டதற்கு இணங்க, மேலே குறிப்பிட்ட அளவு அட்ரோபின் கலந்த ஆல்கஹாலை ஒரு நபர் உட்கொண்டால் ஆல்கஹாலின் விளைவுகளுடன் சேர்ந்து நாக்கு உலர்ந்துபோகும், கண் வெளிச்சம் மங்கலாகும், கண் கூசும், கண் வெண்விழி படலம் சிவக்கும், உணவு உட்கொள்ள கடினமாக இருக்கும், நெஞ்சு படபடப்பு ஏற்படும், மேலும் அட்ரோபின் அளவு இரத்தத்தில் 30 ல் இருந்து 150 மில்லி கிராமிற்கு அதிகமாக இருக்குமானால், அது உயிருக்கும் ஆபத்தாக அமையலாம் என்று சான்று வழங்கினேன். தற்போது என்னிடம் காட்டப்படும் அந்த சான்று அ.சா.ஆ–3 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலீசார் 17.11.2020 ல் விசாரித்தார்கள். மேற்படி திரவத்தின் ஆய்வு எதையும் நான் செய்யவில்லை என்றால், சரிதான். வட்டார தடய

அறிவியல் ஆய்வக அறிக்கையின் அடிப்படையில் தான் நான் மேற்படி விபரங்களை குறிப்பிடுகிறேன் என்றால், சரிதான். அட்ரோபின் 9.3 மில்லி கிராமம் என்பது , 100 மில்லி திரவத்தில் இருந்த அட்ரோபின் அளவு என்றால், சரிதான். இந்த அளவை விட அதிகமாக இருந்தால் தான் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகும் என்றால், அதனை அருந்துபவரின் உடல்நலம் மற்றும் அவர் குடிக்கும் அளவு ஆகியவற்றை பொறுத்து தான் விளைவுகள் ஏற்படும். நான் நேரடியாக மேற்படி திரவத்தை ஆய்வு செய்யாமல் அளிக்கும் சாட்சியம் ஏற்புடையதல்ல என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
**இரணியல்.**